தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 14, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, ஏப்ரல் 27, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.''

ஒருவர் சொல் தவறாதவராய், சோர்வு இல்லாதவராய், யார்க்கும் அஞ்சாதவராய் இருப்பாரேயானால் அவருடைய பேச்சில் மாறுபட்டு வெற்றி அடைவது என்பது எவராலும் முடியாதது ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 481, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

481—

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி

*10399—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியை அரசினர் கலைக் கல்லூரி வளாகத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மருத்துவக் கல்லூரியை அரசினர் கலைக்கல்லூரி அருகே மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு இடையே உள்ள தூரம் சுமார் 14 கிலோ மீட்டர்,

நான் அந்தக் கல்லூரியிலே படித்ததன் காரணமாக அங்கே படிக்கக் கூடிய மாணவர்களுடைய சிக்கல்களும் கஷ்டங்களும் எனக்கு நன்றாகத் தெரியும் என்ற காரணத்தால் இந்தக்கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயே நான் கேட்டிருந்தேன். அங்கே மருத்துவ மனைக்கு அருகாமையில் இருக்கக் கூடிய அரசு கலைக் கல்லூரியை மருத்துவக் கல்லூரியாக மாற்றி விட்டு, அந்த மருத்துவக் கல்லூரி இருக்கின்ற இடத்தில் அரசு கலைக் கல்லூரியாக மாற்றினால் அங்கே இருக்கக் கூடிய பி.எஸ்.ஜி. போன்ற வரிசையாக இருக்கக் கூடிய கலைக் கல்லூரிகளோடு அதுவும் இடம் பெறும் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த ஒரு சீர்திருத்தத்தை செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அந்த மாணவர்களிடத்திலே பேசப்பட்டது. இன்பார்மல் ஆகப் பேசினோம். அப்போது அவர்கள் அந்த இடத்திற்கு வருவதற்கு மறுப்பு தெரிவித்தார்கள். காரணம் அந்த மருத்துவக் கல்லூரி வளாகம் பெரிய அளவிலேயும் சிறப்பாகவும் இருக்கிறது என்ற உணர்வின் அடிப்படையிலே அந்தக் கல்லூரியை மாற்றுவதற்கு அவர்கள் மறுப்பு தெரிவித்து விட்டார்கள். எனவே தான் அது கைவிடப்பட்டது. இதற்காக அதிகார பூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னாலும் நான் நேரிடையாக அங்கே சென்றிருந்த போது அந்த மாணவர் பிரதிநிதிகளோடு இது பற்றி பேசியபோது அவர்கள் ஆரம்பத்திலேயே அதை மறுத்து விட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அந்த மருத்துவக் கல்லூரியிலே பிரசிடென்டாக இருந்தேன். டாக்டர் கருப்புசாமி அவர்களும் அங்கே பிரசிடென்டாக இருந்தார்கள். நாங்கள் அங்கே பிரசிடென்டாக இருந்தபோது கூட இந்தக் கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். இப்போது இருக்கிற மாணவர்களும் அதே கோரிக்கையைத்தான் சொல்லுகிறார்கள். வேண்டும் என்றால் அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் அதை வேண்டாம் என்று சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அது நகரத்தினுடைய மையப் பகுதியில் இருக்கிற காரணத்தால் அவர்கள் வேண்டுமானால் அதை மாற்றுவதற்கான வாய்ப்புகளை நிராகரிப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் மருத்துவக்கல்லூரி மாணவர்களைப் பொறுத்த வரையில் மருத்துவ மனைக்கு அருகாமையிலே மருத்துவக் கல்லூரி இருந்தால்தான் அந்த பிராக்டிகல் டிரெயினிங் ஹவுஸ் சர்ஜன் டிரெயினிங்குகளை எடுப்பதற்கும் கிளினிகல் ஸ்டூடன்டுகள்

1993 ஏப்ரல் 27]

படிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால், மாண வர்கள் விரும்புகிறார்களோ விரும்பவில்லையோ அக்கடமிக் இன்டிரஸ்ட் என்று பார்க்கும்போது நாம் அப்படிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த கல்லூரியினுடைய தரமும் குறிப்பாக நோயாளிகளுடையக் நோய்களைக் கண்டு அறியக்கூடிய தன்மையும் நன்றாக இருக்கும் என்ற காரணத்தி னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு மறு பரிசீலனை செய்தால் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கல்லூரிகளிலே இருக்கிற மாணவர் களையும் இதற்கு ஒத்துக்கொள்ள வைக்க வேண்டியது அரசி னுடைய கடமையாகத்தான் இருக்கும். ஆனால் அரசு மருத்துவ கல்லூரியிலே— கோவைக்கு நான் சென்றிருந்தபோது அவர் களிடத்திலே பேசியபோது அவர்கள் தெரிவித்த கருத்து அது. எனவே அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தால் அதற்குப் பின்னாலே நான் கலைக் கல்லூரி மாணவர்களிடத்திலே பேசி இருக்க முடியும். ஆனால் ஆரம்பத்திலேயே அந்த மாணவர் கள் அங்கே வருவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. காரணம் அந்த கட்டிடங்கள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள். அதற்குப் பின்புதான் இப்போது புதி தாக ஆரம்பிக்க இருக்கிற சிறப்பு மருத்துவப் பிரிவுகளை அந்தக் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே ஆரம்பிக்கலாமா என்று ஆலோ சனை கூட சொல்லப்பட்டது. அந்த ஆலோசனையைக் கூட மருத்துவர்கள் மறுத்து, அதை மாற்றி இரண்டு இடத்திலே வைத்தால் பிரச்சினையாக இருக்கும், எனவே கல்லூரி வேறு இடத்தில் இருந்தாலும் மருத்துவ மனை பிரிக்கப்படாமல் ஒரே இடத்தில் இருந்தால்தான் நிர்வாகம் சிறப்பாக இருக்கும் என்று சொன்ன காரணத்தினால்தான் அதுவும் அப்படியே விடப் பட்டிருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியில் நான் மாணவர் தலைவனாக இருக்கிறபோது மாணவர்கள் படுகின்ற கஷ்டங்களை எல்லாம் கண்டு அந்த மனைக்கு அருகில் உள்ள அரசு கலைக் கல்லூரிக்கு மருத்துவக்கல்லூரியை மாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் கூறியபோது இப்போது அந்த மாணவர்கள் விரும்பவில்லை என்று சொன்னார்கள். அந்த மருத்துவக் கல்லூரியில் கிட்டத்தட்ட ஒரு 550 எக்கரா நிலம் காலியாக உள்ளது.

அந்த இடத்தில் படிப்படியாக மருத்துவமனையையே மாற்றியமைத்தால் அங்குள்ள மாணவர்களுக்கு வசதியாக இருக்கும். இப்போது நோயாளிகள் ஒவ்வொருவரும் சிலபல டெஸ்டுகள் செய்வதற்கு 13 கிலோ மீட்டர் தூரம் அதிக செலவு செய்து செல்லவேண்டியிருப்பதால் மருத்துவமனையையே படிப்படியாக மாற்றும் உத்தேசம் அரசிடம் உள்ளதா அல்லது அமைச்சர் அதைப்பற்றி பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 400, 500 மாணவர்கள் கொஞ்சம் சிரமப்படுகிறார்கள் என்பதற்காக ஆயிரக்கணக்கான நோயாளிகளை நாம் சிரமப்படுத்த முடியாது. இந்தக் கட்டிடத்தை அங்கே மாற்றிக் கட்டுவது என்று சொன்னால் அவ்வளவு சாதாரணமான காரியம் அல்ல. மிகப்பெரிய அளவிலே நிதி தேவைப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்ந்திருக்கிறார் என்று கருதுகிறேன். படிப்படியாகச் செய்யலாம் என்று கருதித்தான் சில சிறப்புப் பிரிவுகளை மட்டும் புதிதாகத் துவங்குகின்றபோது அங்கே துவங்கலாம் என்று நாம் கருதினாலும் அதிலேயும் அப்படி கொண்டு போகின்ற போது நிறைய இடையூறுகள் இருக்கும், மாறி மாறிச் செல்வதற்கு ஓ.பி.க்கு பேஷன்ட் அங்கே வந்து, அங்கேயிருந்து இங்கே கொண்டு வந்து அவர்களை அனுமதிப்பது இப்படிப்பட்ட பிரச்சினைகள் நிறைய வரக்கூடும் என்ற காரணத்தால் அதுவும் இப்போது அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் மீண்டும் ஒரு முறை மருத்துவக் கல்லூரி மாணவர்களிடத்திலே நான் பேசிப்பார்க்கிறேன். அவர்கள் ஒத்துக்கொண்டால் அதற்குப்பின்பு கலைக் கல்லூரி மாணவர்களிடத்திலே பேசலாம். அவர்களும் ஒப்புக்கொண்டால் மாற்றிக் கொடுப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லை. மிக மகிழ்ச்சியாக நாங்கள் அதை மாற்றிக் கொடுத்துவிடுவோம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை கலைக்கல்லூரி என்பது கோவை மருத்துவமனையினுடைய அடுத்த காம்ப்பவுண்ட். ஒரே சுவர்தான், ஆகவே கோவை மருத்துவக் கல்லூரி என்பது மருத்துவமனையிலிருந்து 13 கிலோ மீட்டரில் இருக்கிறது. கலைக் கல்லூரியை அந்த மருத்துவக் கல்லூரி இருக்கின்ற இடத்திற்கு மாற்றினால் அங்கேயும் பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ் காலேஜ் இருக்கிறது. சி.ஐ.டி என்ஜினியரிங் காலேஜ் இருக்கிறது. காலேஜ்கள் எல்லாம் அதே ரோட்டிலேதான் இருக்கின்றன. ஆகவே கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுக்கும்

1993 ஏப்ரல் 27]

சௌகரியமாக இருக்கும். இங்கே மருத்துவக் கல்லூரியை மாற்றினால்-கவர்ன்மென்ட் ஆர்ட்ஸ் காலேஜிலே மாற்றினால் இங்கே இருக்கின்ற நோயாளிகள் போவதற்கும், அங்கே வைத்தியம் செய்வதற்கும் இந்த டாக்டர்களுக்கும் சௌகரியமாக இருக்கும். அல்லது எதிரே ஒரு வாலாங்குளம் இருக்கிறது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்பதற்கு உங்களை அனுமதித்தால் நாள்தோறும் இதே மாதிரியே விரிவாகப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜூ : பேரவைத் தலைவர் அவர்களே, எதிரே ஒரு வாலாங்குளம் இருக்கிறது. அது சுமாராகத்தான் இருக்கிறது. அந்த வாலாங்குளத்தில் கூட அந்த மருத்துவக் கல்லூரியை எக்ஸ்டென்ட் செய்யலாம். அதை அரசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கெனவே அவர்களும் சொன்னார்கள். வாலாங்குளத்திலே இப்போது இருக்கின்ற நிலையிலே மீன் வேண்டுமானால் வளர்க்கலாம். அதிலே இப்போது கட்டிடம் கட்டுகிற அளவிற்கு நிலைமைகள் சரியாக இல்லை. அதிலே தேவையான அளவிற்கு மண் எல்லாம் கொட்டி. அதற்குப்பின்னாலே—அது லாங் ப்ராஸஸ். எனவே தான் நான் சொன்னேன். உடனடியாக அதைச் செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. இதிலே இருக்கின்ற ஒரே ஒரு சுலபமான வாய்ப்பு இரண்டு கல்லூரி மாணவர்களும் அங்கேயிருந்து இங்கே மாற்றிக் கொள்வதற்கு ஒத்துக்கொள்வார்களேயானால் இந்தப் பிரச்சினை முழுவதுமாக தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன். எனவே அங்கே போய்விட்டால் நீங்கள் சொன்னதைப்போல கலைக் கல்லூரி எல்லாம் ஒரே பக்கத்தில் இருந்தால் பிரச்சினைகளும் ஒரே பக்கமாகப் போய்விடும். நமக்கு சமாளிப்பதும் சிரமம் இல்லாமல் இருக்கும். எனவே, அதையெல்லாம் யோசித்து அந்த இரண்டு கல்லூரி மாணவர்களிடத்திலேயும் நாங்கள் அழைத்துப் பேசலாம். இங்கே டாக்டர் கருப்புசாமி அவர்களும் ஸ்ரீதரன் அவர்களும் முன்னாள் மாணவர்கள் என்று தெரிவிக்கின்றார்கள். எனவே அவர்களே கூட அந்த மாணவர்களைச் சந்தித்து அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களானால் அரசிற்கு கொஞ்சம் பிரச்சினை குறையும். எனவே கோவை கலைக் கல்லூரியிலே படித்தவர்கள் யாராவது இருப்பார்களேயானால், அவர்கள் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டால் எங்களுடைய பிரச்சினை கொஞ்சம் தீர்ந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 482, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.